# பக்தி இலக்கியங்களில் தமிழ் வளர்ச்சி

[கட்டுரைத் தொகுப்பு]


பதிப்பாசிரியர்

முனைவர் சே. திருநாவுக்கரசு

தொகுப்பாசிரியர்

முனைவர் ஏ. கோதண்டராமன்



அகல் பதிப்பகம்



பக்தி இலக்கியங்களில் தமிழ் வளர்ச்சி [கட்டுரைத் தொகுப்பு]



அகல் பதிப்பகம்


விலை : ரூ.


ISBN 9 788198 977472

பக்தி இலக்கியங்களில்

# தமிழ் வளர்ச்சி

(கட்டுரைத் தொகுப்பு)

பதிப்பாசிரியர்
முனைவர் சே. திருநாவுக்கரசு

தொகுப்பாசிரியர்
முனைவர் ஏ. கோதண்டராமன்
இணைப் பேராசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்
தமிழ்த்துறை,
அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி [சுழல் – 2],
மீனம்பாக்கம், சென்னை – 600 061.

அகில் பதிப்பகம்
சென்னை

18. சைவ வைணவத்தில் அறிவியல் சிந்தனைகள்
- **ச.இராதாகிருஷ்ணன்** .......... 134

19. திருமந்திரத்தில் காணலாகும் உடல் மீதான கருத்தாக்கங்கள்
- **முனைவர் ச. பிரபாகரன்** .......... 144

20. தமிழ் வளர்ச்சியில் ஐரோப்பியரின் பங்களிப்பு
- **முனைவர் மோ.கிறிஸ்டி** .......... 149

21. வள்ளலாரின் இறைவழிபாடும், தமிழ்ப்பணியும்
- **முனைவர் ம. அருள்தாஸ்** .......... 157

22. இசுலாமிய பக்தி இலக்கியத் தமிழ் வளர்ச்சியில் மாலைகள் - பல்சந்தமும் மிகுராசு மாலையும் - **முனைவர் பா. மொய்தீன் ஆரிப்** .......... 163

23. நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் தமிழ்ப் பயன்பாடு
- **முனைவர் மு. காமராஜ்** .......... 169

24. ஞானத்தமிழ் வளர்த்த ஞானசம்பந்தர் **முனைவர் கி. அன்பு** .......... 174

25. இஸ்லாமிய தமிழ் இலக்கிய முன்னேற்றத்தில் இஸ்லாமிய இலக்கிய கழக மாநாடுகளின் பங்களிப்பு -**முனைவர் மு.முஹம்மது ரஃபீக்** 183

26. சைவ இலக்கியங்கள் - **எஸ்.கலா** .......... 192

27. மக்களின் செல்வாக்கைப் பெற்றதா? கந்தபுராணம்
- **முனைவர் பொன் சண்முகம்** .......... 199

28. நம்மாழ்வாரின் நான்மறைகள் **முனைவர் த. ராதிகா லட்சுமி** .......... 204

29. சைவ இலக்கியமும் தமிழ் வளர்ச்சியும் - **பா. மோகனா** .......... 211

30. ஆண்டாளின் இறையும் இலக்கியப்பணியும் - **அ. நித்தியபாலா** .......... 216

31. பெரியபுராணமும் இறைச் சிந்தனைகளும்
- **திருமதி. மு.கார்த்திகா** .......... 223

32. தமிழ் காப்பியங்களில் பௌத்தம் - **சே. செண்பகம்** .......... 231

33. இரட்சணிய யாத்திரிகத்தில் தற்குறிப்பேற்ற அணி
- **அ.அருண்குமார்** .......... 239

34. அருள்மிகு மாசாணியம்மன் வரலாறும் வழிபாடும்
- **முனைவர் மு. இராதா** .......... 247

35. சைவம் வெளிப்படுத்தும் இறையன்பு
- **முனைவர் கே.எஸ்.பிரணதார்த்திஹரன்** .......... 254

36. சைவ சமயமும் சிவ வடிவங்களும் - **முனைவர் கி. அன்பு** .......... 260

37. சிவவாக்கியரின் இறை வழிபாட்டுச் சிந்தனை
- **முனைவர் மு. முஸ்தபா** .......... 271



38. வைணவ இலக்கியங்களில் அகப்பொருள் மரபுகள்
- **முனைவர் கே.சி.ஆர். ஷிஜி** .......... 276

39. திருமங்கையாழ்வாரின் பாடல்களில் இலக்கிய வடிவங்கள்
- **முனைவர் கி. அன்பு** .......... 282

40. திருவள்ளுவரும் கடவுள் கோட்பாடும் - **ந. திருமால்** .......... 292

41. இசுலாமிய நாட்டுப்புறப் பாடல்களில் பக்தியின் விழுமியங்கள்
- **முனைவர் சா. இன்குலாப்** .......... 299

42. ஆண்டாளும் திருப்பாவையும் - **முனைவர் சு. தீபா** .......... 306

43. ஆயர் வழிபாடுமுறைகள் - **முனைவர் ம. காயத்ரி** .......... 312

44. சித்தர் இலக்கியங்களில் பக்தி நெறி **முனைவர் மு. முஸ்தபா** .......... 318

45. அப்பாண்டைநாதர் உலாவில் காணலாகும் பக்தி
- **முனைவர் து.பத்மமாலதி** .......... 322

46. முத்தித்தராயன் கோயில் வரலாறும் அமைப்பும்
- **ம. இராஜகணபதி** .......... 331

47. குடகர்களின் பக்தி நெறி - **மு. கோகிலா** .......... 338

48. பக்தி இலக்கியங்களில் வேளாண்மை - **முனைவர் வெ.பரிமளம்** .... 344

49. பௌத்தம் வளர்த்த தமிழ் - **முனைவர் வே. லீலாவதி** .......... 350

50. தமிழ் வளர்ச்சியில் தேவாரத்தின் பங்கு
- **முனைவர் ஆ. சிவனருட்செல்வி** .......... 359

51. திருவாசகம் திருப்பொற்சுண்ணம் - **முனைவர் அரு.அபிராமி** .......... 364

52. வைரமுத்துப் படைப்புகளில் சமுதாயம் - **வெ. கவிதா** .......... 368

53. ஆண்டாள் உணர்த்திய வாழ்வியலும் - பண்பாடும்
- **முனைவர் ஜா. மாலா** .......... 383

54. குழிஇருசாயி வழிபாடு - **இ தினேஷ்** .......... 389

55. சைவம் வளர்த்த தமிழ் - **முனைவர் சு. செல்வக்குமார்** .......... 398

56. ஆண்டாள் பாசுரங்களில் பக்தி நெறி - **வே. பிரவீனா** .......... 404

57. திருப்பாவையில் குறிப்புப் பொருள்கள்
- **முனைவர் ச. இரா.செம்மலர்** .......... 413

58. சைவ சமய குரவர்கள் - **கு. தீபரதி** .......... 420

59. சித்தர் இலக்கியங்களில் பக்தி நெறி - **திருமதி. கோ. ஹேமலதா** .... 429

60. நாட்டார் தெய்வங்கள் **முனைவர் வ. மோகனப் பிரியா** .......... 434

61. இமாம் அல்-அரூஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் கல்வி மற்றும் சமூக சேவைகள்:ஒரு பன்முகப் பார்வை. - **Mr. Mohamed Ali** .......... 439

# சைவம் வளர்த்த தமிழ்

**முனைவர் சு. செல்வக்குமார்**
உதவிப் பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி
பொள்ளாச்சி

தமிழ்மொழி உலகின் பழமையான, செழுமையான மொழிகளில் ஒன்றாகும். அந்த மொழியின் வளர்ச்சிக்கு பல்வேறு சமயங்கள், சிந்தனைகள், இலக்கியங்கள் பங்களித்துள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்கது சைவம். சைவம் என்பது சிவனைக் கடவுளாக மதிக்கும் ஒரு பெரிய மதக்கோட்பாடாகும். இந்தச் சைவப் பரம்பரை தமிழில் மட்டுமல்லாது, தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியுள்ளது. தமிழை இடையறவில்லாமல் காத்த பெருமையில் சைவ இலக்கியங் களுக்குப் பெரும் பங்குண்டு, சைவம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்பு குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### ஆய்வு நோக்கம்

சைவ சமயம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அளித்த பங்களிப்பு குறித்து ஆய்வது ஆய்வு நோக்கமாகிறது.

### சைவ இலக்கியங்கள்

சைவ நாயன்மார்கள் என்றழைக்கப்படும் 63 பெரியோர்கள், சிவபக்தியை வெளிப்படுத்தும் திருப்பாடல்களை இயற்றினர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடிய பாடல்கள் தேவாரம் என அழைக்கப்படுகின்றன. இவை தமிழில் பக்திப் பாவனையை வளர்த்ததுடன், அந்தக் காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையையும் மொழி வளர்ச்சியையும் பதிவுசெய்தன. மேலும், மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம் தமிழ் இலக்கியத்தின் மிக உயரிய இடத்தில் இருக்கின்றது. “திருவாசகத்துக்குப் பதிலேதுமில்லை” என்பது அதனைப்பற்றிய ஒரு புகழ். கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஏற்பட்ட சைவ



மறுமலர்ச்சி, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு பொற்காலமாக அமைந்தது.

நாயன்மார்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் (அப்பர்), சுந்தரர் மற்றும் மாணிக்கவாசகர் ஆகியோர் பக்திப் பாடல்கள் மூலம் சைவத்தையும் தமிழையும் ஒருசேர வளர்த்தனர். இவர்களின் பாடல்கள் திருமுறைகள் எனத் தொகுக்கப்பட்டு, தமிழின் இசை வளத்திற்குச் சான்றாகத் திகழ்கின்றன. நாயன்மார்கள் பாடிய பக்திப் பாடல்களை நம்பியாண்டார் நம்பி பதினொரு திருமுறைகளாகத் தொகுத்தார். பின்னர் சேக்கிழாரின் பெரியபுராணமும் சேர்ந்து பன்னிரண்டாம் திருமுறையாக இணைக்கப்பட்டது. இந்தத் திருமுறைகள் தமிழின் சொற்செழிப் பிற்கும், இசை இலக்கியத்திற்கும், பக்தி இலக்கியத்திற்கும் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கின.

திருவாசகம் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், ஆழ்ந்த ஆன்மீக அனுபவங்களையும், பக்திப் பரவசத்தையும் வெளிப்படுத்தும் ஒரு தலைசிறந்த தமிழ் படைப்பாகும். பன்னிரு திருமுறைகளின் சிறப்பைப் பின்வரும்பாடல் உணர்த்தக் காணலாம்.

திருமுறையே சைவநெறிக் கருவூலம்
தென்தமிழின் தேன்பாகாகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான்
செவிமடுத்த செந்தமிழ்வேதம்
திருமுறையே நடராசன் கரம்வருந்த
எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய்
மலர்ந்தருளும் சிறப்பிற் றாமால்.

- (கரு முதல் திரு வரை.ப.22)

### நூற்றாண்டு அடிப்படையில் சைவச் சான்றோர்

நூற்றாண்டு அடிப்படையில் சைவச் சான்றோர்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

#### கி.பி. 7-ஆம் நூற்றாண்டு

1. திருஞானசம்பந்தர் 2. திருநாவுக்கரசர் 3.ஐயடிகள் காடவர்கோன்

**கி.பி. 8-ஆம் நூற்றாண்டு**

1. சுந்தரர் 2. சேரமான் பெருமாள் 3. ஏனாதிசாத்தஞ் சாத்தனார் 4. பெருமானடிகள்

**கி.பி. 9-ஆம் நூற்றாண்டு**

1. மாணிக்கவாசகர் 2. சேந்தனார் 3. பட்டினத்தடிகள்

**கி.பி. 10-ஆம் நூற்றாண்டு**

1. நம்பியாண்டார் நம்பி 2. ஔவையார் 3. வேம்மையர்கோன் நாராயணன் 4. கண்டராதித்தர்

**கி.பி. 11-ஆம் நூற்றாண்டு**

1. நம்பிகாடநம்பி 2. கருவூர்த்தேவர் 3. பூங்கோயில் நம்பி 4. திருச்சிற்றம்பல முடையான்

**கி.பி. 12-ஆம் நூற்றாண்டு**

1. சேக்கிழார் 2. வேணாட்டடிகள் 3. புருடோத்தம நம்பி 4. வாகீச முனிவர் 5. உய்யவந்ததேவ நாயனார் 6. சயங்கொண்டார் 7. ஒட்டக்கூத்தர் 8. தமிழ்த்தண்டியாசிரியர் 9. கவிகுமுத சந்திர பண்டிதன் 10. பரசமய கோளரி மாமுனி 11. நெற்குன்றங்கிழார் களப்பாளராசர்

**கி.பி. 13-ஆம் நூற்றாண்டு**

1. சேதிராயர் 2. கல்லாடதேவர் 3. நக்கீரதேவர் 4. பரணதேவர் 5. மெய்கண்டதேவர் 6. அருணந்திசிவனார் 7. இளம்பூரணர் 8. பேராசிரியர் 9. அடியார்க்குநல்லார் 10. சேனாவரையர் 11. தக்கயாகப்பரணி உரைக்காரர் (ஔவை துரைசாமிப்பிள்ளை, சைவ இலக்கியவரலாறு, ப. 27)

**சைவ சித்தாந்தம் மற்றும் தமிழ் தத்துவம்**

சைவம் மட்டுமல்லாமல், சைவ சித்தாந்தம் என்ற தத்துவ அமைப்பும் தமிழில் விரிந்துள்ளது. சைவ சமய தத்துவத்தை விளக்கம் சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் தோன்றியுள்ளன. இவை கி.பி.12, 13,14 ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை. 9 அருணாசலம், மு.இராஜா வரதராஜா, தமிழ் இலக்கியவரலாறு, ப.175) உயிர் (பசு), கடவுள் (பதி), பாசம் (பந்தம்) ஆகிய மூன்று சார்தல்களில் இது



அமைந்துள்ளது. இந்த தத்துவக் கோட்பாடுகள் தமிழில் ஆழமான சிந்தனையை உருவாக்கின. இது தமிழ் மொழிக்கு புதிய சொற்கள், தத்துவவியல்கள், நடைமுறைகள் ஆகியவற்றை வழங்கியது.

**கலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சி**

சைவ கோயில்கள் தமிழ்நாட்டின் சிற்பக்கலையை உலகளவில் புகழப்படுத்தின. நடராஜர் சிலை ஒரு அழகிய உதாரணமாகும். இசை, நடனம், ஓவியம், கட்டிடக்கலை ஆகியவை சைவ வழிபாடுகளின் மூலம் வளர்ந்தன. மேலும், கோவில் விழாக்கள், நந்தித்தேர் உலா, திருவிழா போன்ற நிகழ்வுகள் தமிழரின் பண்பாட்டை மேலும் வலுப்படுத்தின.

சமூக நீதியும் சைவம் சைவ நாயன்மார்கள் சாதியை மீறி பக்தியை உயர்த்தினர். உதாரணமாக நந்தனார் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியினராக இருந்தும் சிவபக்தியால் உயர்ந்தவர். இது சமத்துவம் மற்றும் சமூக ஒற்றுமைக்கான விதையை விதைத்தது. சைவ சமயமும் தமிழ் மொழியும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாத அளவுக்குப் பின்னிப் பிணைந்தவை. தமிழே சிவம் என்றும், சிவமே தமிழ் என்றும் சைவர்கள் கருதுகின்றனர். சங்க காலம் தொட்டே சைவ சமயம் தமிழ்நாட்டில் வேரூன்றி, தமிழ் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு எனப் பல்வேறு துறைகளிலும் பெரும் பங்காற்றியுள்ளது.

**சைவத்தின் தொன்மை**

சைவம் மிகத் தொன்மையான சமயங்களில் ஒன்று. சிந்து சமவெளி நாகரிகத்தில் கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கங்கள் சைவ வழிபாட்டின் பழமையைப் பறைசாற்றுகின்றன. சங்க இலக்கியங்களான தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, மதுரை காஞ்சி போன்ற நூல்களில் சிவபெருமான் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. "முக்கட் செல்வன்", "கறை மிடற்றண்ணல்", "நீலமணி மிடற்றண்ணல்" போன்ற பெயர்களில் சிவன் போற்றப்பட்டுள்ளார்.

**சைவ சித்தாந்தமும் தமிழ் பங்களிப்பும்**

சைவ சமயத்தின் தத்துவப் பிரிவாகிய சைவ சித்தாந்தம், தமிழ் அறிவின் சிறந்த வெளிப்பாடாகக் கருதப்படுகிறது. மற்ற மதங்களின் தத்துவ நூல்கள் பெரும்பாலும் வடமொழியில் அமைய, சைவ

சித்தாந்தத்தின் அடிப்படை நூல்களான பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள் தமிழிலேயே அமைந்துள்ளன என்பது இதன் தனிச்சிறப்பு. சிவஞான போதம்: மெய்கண்ட தேவர் இயற்றிய சிவஞான போதம், சைவ சித்தாந்தத்தின் மூல நூலாகக் கருதப்படுகிறது. இது ஆன்மா, பதி, பாசம் ஆகிய முப்பொருள்களின் இயல்புகளையும், அவற்றின் பிணைப்பையும், வீடுபேற்றின் வழிகளையும் தெளிவாக விளக்குகிறது. உமாபதி சிவாச்சாரியார்- இவர் சிவப்பிரகாசம், திருவருட்பயன் போன்ற பல சைவ சித்தாந்த நூல்களை இயற்றி, தமிழ் மொழிக்கும் சைவ சமயத்திற்கும் பெரும் தொண்டாற்றினார்.

பிற இலக்கிய வடிவங்கள் சைவம் பக்தி இலக்கியம் மட்டுமல்லாமல், புராணங்கள், சிற்றிலக்கியங்கள், கோவைகள், கலம்பகங்கள், பதிகங்கள் போன்ற பல்வேறு இலக்கிய வடிவங்களின் வளர்ச்சிக்கும் வித்திட்டது.

**கலைப் பண்பாடு**

கோவில்கள் சைவத்தின் மையங்களாகச் செயல்பட்டன. கோவில்களில் நடனம், இசை, நாடகம் போன்ற கலைகள் வளர்க்கப்பட்டு, தமிழ் பண்பாட்டில் ஒருங்கிணைந்தன.

**முடிவுரை**

சைவ சமயம் தமிழ் மொழியை வெறும் இலக்கிய மொழியாக மட்டுமல்லாமல், ஒரு இறை மொழியாகவும், ஆன்மீக மொழியாகவும் உயர்த்தியது. சைவம் தந்த தமிழ் இலக்கியங்களும், தத்துவங்களும் காலத்தால் அழியாத கலைப் பொக்கிஷங்களாகத் திகழ்கின்றன. சைவம் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு ஆதாரமாக விளங்கியது. மொழி, இலக்கியம், கலாசாரம், தத்துவம், சமுதாயம் எனப் பல துறைகளிலும் இதன் தாக்கம் உறுதியாகவே இருந்து வந்துள்ளது. இன்றுள்ள தமிழின் ஆழம், பண்பாடு, செழுமை ஆகியவைகளுக்குப் பின்னால் சைவத்தின் தாக்கமும் பங்களிப்பும் மறுக்க முடியாததாக இருக்கின்றன என்பது தெளிவாகிறது.

**துணைநின்ற நூல்கள்**

1. அருணாசலம், ப., பக்தி இலக்கியம், முல்லை நிலையம், 5. பாரதி நகர் முதல் தெரு,தி.நகர், சென்னை-17
2. அருணாசலம், மு. இராஜா வரதராஜா, தமிழ் இலக்கிய வரலாறு, என். சி.பி.எச். வெளியீடு, அம்பத்தூர் சென்னை-50
3. ஔவை துரைசாமிப்பிள்ளை, சைவ இலக்கியவரலாறு, ஸ்ரீ செண்பகா பதிப்பகம் பாண்டிபஜார், சென்னை-17
4. சங்கர நாராயணர், சைவமும் தமிழும், அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவில் வெளியீடு, பழனி- 01.
5. கரு முதல் திரு வரை, சிவனடியார் திருக்கூட்டம் அறக்கட்டளை வெளியீடு, பவானி- 01.